# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டின் சிறப்பியல்பாகத் தொலைநிலைக்கல்வி இயக்ககம் ஆகஸ்ட் 2006ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்வியக்ககத்தின்கீழ்ப் பல்வேறு பாடப்பிரிவுகள் தொலைநிலைக்கல்வி வாயிலாக 2006-07 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றுச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

உயர்தரக் கல்வியை உலகிற்குப் பகிர்ந்து அளித்தல், தமிழ் மரபு சார்ந்த கலை அறிவியல் தொழில்நுட்பங்களைத் தலைமுறைகள் பயன்கொள்ள வழிவகை செய்தல், வாய்ப்பு வளம் அமையப் பெறாத சமுதாயத்தினை நோக்கிச் சென்று கல்வி கற்கும் வாய்ப்பினை அமைத்துத் தருதல், மண் வளம், மரபு வளம், கல்வி செயல்முறை அறிவுகளால் காக்கப்படுவதற்கு வழி காணுதல், தமிழர்தம் மரபுவழி சார்ந்த அறிவியல் தொழில்நுட்பம், மொழி, இலக்கணம், வரலாறு போன்ற நிலைப்பாடுகளின் செவ்வியல் பண்புகளை உலகறியச் செய்தல், தமிழால் முடியும் தமிழனால் முடியும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் எவ்வகை அறிவுத்துறையிலும் விளக்கம் பெற முடியும் என நிறுவுதல் போன்றவை தொலைநிலைக்கல்வி இயக்ககத்தின் முதன்மைக் குறிக்கோள்களாக அமைந்துள்ளன.

2008ஆம் ஆண்டு முதல் தமிழ்ப் பல்கலைக் கழகத் தொலைநிலைக்கல்வி இயக்ககத்தின் கல்வி மற்றும் தகவல் மையங்களாக மாவட்டம், மாநகராட்சி, வட்டம் ஆகிய அனைத்து நிலைகளிலும் மொத்தம் 149 மையங்கள் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன, மேலும், பல கல்வி விரிவாக்க மையங்களைத் தொடங்கி நடத்துவதற்கான முயற்சிகளிலும் இவ்வியக்ககம் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்கக வாயிலாக நடத்தப்பெறும் அனைத்துப் பாடப்பிரிவுகளுக்கும் புதுதில்லியிலுள்ள பல்கலைக்கழக மானியக்குழு (UGC-DEB) உரிய அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

கல்லூரி, பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்கள் தொலைநிலைக்கல்வி இயக்ககம் மூலம் ஒரே நேரத்தில் பிறிதொரு பட்டயம் (Diploma), சான்றிதழ் (Certificate) வகுப்புகளில் படிக்கும் வாய்ப்பும் உள்ளது.

தொலைநிலைக்கல்வி இயக்கக வழிப் பயில விரும்பும் மாணவர்கள், தொலைநிலைக்கல்வி இயக்ககக் கல்வி மற்றும் தகவல் மையங்களில் அல்லது தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இயக்ககத்தில் (நேரில்/அஞ்சல்வழி) உரிய தொகையைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், தமிழ்ப் பல்கலைக்கழக இணையதள வழியாகவும் விண்ணப்பங்களைப் பெற்றுச் சேர்க்கை பெற உரிய விண்ணப்பப்படிவத் தொகையை வரைவோலையாக எடுத்து இணைத்து அனுப்பலாம்.

### தொலைநிலைக்கல்வி இயக்ககவழி நடத்தப்பெறும் பாடப்பிரிவுகள்

| | |
|---|---|
| இளநிலை | தமிழ், வரலாறு, தமிழ் இலக்கியம், தமிழிசை, பரதநாட்டியம், புவியியல், பி.பி.ஏ., பி.சி.ஏ.. இளங்கல்வியியல் (பி.எட்.), ஆங்கிலம், நூலக மற்றும் தகவலறிவியல் (பி.எல்.ஐ.எஸ்), வணிகவியல் (பி.காம்), கணிதம், உளவியல், தாவரவியல் |
| முதுநிலை | தமிழ், வரலாறு, புவியியல், தமிழிசை, பரதநாட்டியம், எம்.பி.ஏ., ஆங்கிலம், சமூக பணி, நூலக மற்றும் தகவலறிவியல் (எம்.எல்.ஐ.எஸ்), சுற்றுச்சூழல் அறிவியல், வணிகவியல் (எம்.காம்), யோகாவும் மனித மாண்பும், கணிதம், உளவியல்,தாவரவியல் |
| பட்டயம் | இசை ஆசிரியர் பயிற்சி, யோகா ஆசிரியர் பயிற்சி, பரதநாட்டிய ஆசிரியர் பயிற்சி, பரதநாட்டியம், மூலிகை அறிவியல், மருத்துவ மூலிகை அழகுக் கலை, சோதிடவியல், கோயில்அர்ச்சகர் பயிற்சி, தொடுசிகிச்சை அறிவியல், பேச்சுக்கலை, கருவி இசை (வீணை,வயலின், புல்லாங்குழல்,நாதஸ்வரம்), கருவி இசை (மிருதங்கம், தவில்),இசை, மரபுவழித் தமிழ் மருத்துவம்,கல்வெட்டியல்,கோயிற்கட்டடக்கலை, வரைகலை மற்றும் வண்ணக்கலவை,கணிதவியலில் மனக்கணக்கும் கற்றலில் மூளை ஒருங்கிணைப்பும், தீ விபத்து தடுப்பு மற்றும் பாதுகாப்பு முறைகள் |
| சான்றிதழ் | இசை, பரதநாட்டியம், நூலகம் மற்றும் தகவலறிவியல், தமிழ்ப் புலவர் பயிற்சி, தொடு சிகிச்சை அறிவியல், கருவி இசை (மிருதங்கம், தவில்), சுவடியியல்,வரைகலை மற்றும் வண்ணக்கலவை, கணிதவியலில் மனக்கணக்கு |
| முதுநிலைப் பட்டயம் | பி.ஜி.டி.சி.ஏ, பி.ஜி.டி.ஜி.சி. இணையசேவை |
| இரண்டாமாண்டு நேரடிச் சேர்க்கை (Lateral entry) | பி.சி.ஏ (Lateral entry) |
| அறிமுகநிலைப் படிப்பு (Introductory Course) | தமிழ்,ஆங்கிலம்,கணிதம், அறிவியல், சமூக அறிவியல். |
| தொடக்கநிலைப்படிப்பு Pre-Foundation Course) அடிப்படைநிலைப் படிப்பு (Foundation Course) | தமிழ்,ஆங்கிலம்,கணிதம், பொருளாதாரம், புவியியல், வணிகவியல் |

# தொலைநிலைக் கல்வி இயக்ககம்

**இளங்கல்வியியல் [B.Ed.,]**

**[NCTE அனுமதி ஆணை SRO/NCTE/B.Ed.-DE/2007-08/18616 மற்றும் DEB அங்கீகாரம் பெற்றது]**

**நாள்காட்டி ஆண்டு (2017-18)**

**தொலைநிலைக் கல்வி முறை**

## விவரக் கையேடு


**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

**வாகையூர், திருச்சி சாலை, தஞ்சாவூர் - 613 010**


**விலை ரூ.600/-**

**அஞ்சல் வழி விலை ரூ.650/**

**இயக்குநர் (பொ)**
**தொலைநிலைக் கல்வி இயக்ககம்**
**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர் 613 010**

## விவரக் கேட்பு மற்றும் தொடர்புக்கு


**தொலைநிலைக் கல்வி இயக்ககம்,**
**தமிழ்ப் பல்கலைக்கழகம்,**
**வாகையூர், திருச்சி சாலை,**
**தஞ்சாவூர்-613 010**

**04362-227152**

தொலைநகலி: **04362-227434**

**கிளை அலுவலகம்**
**தொலைநிலைக் கல்வி இயக்ககம்,**
**அரண்மனை வளாகம் கீழராசவீதி**
**தஞ்சாவூர் -613 001**

**04362-234581**


## தேர்வுகள் தொடர்பான விவரங்களுக்கு


**தொலைநிலைக் கல்வித் தேர்வுகள்,**
**தமிழ்ப் பல்கலைக்கழகம்,**
**வாகையூர், திருச்சி சாலை,**
**தஞ்சாவூர்-613 010**

**04362-227845**


**மாணவர்களின் கவனத்திற்கு**

**மாணவர்கள் விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யுமுன் இவ்விவரக் கையேட்டினை முழுமையாக படிக்கவும்.**

**இணையதள முகவரி**

**www.tamiluniversity.ac.in**

## விண்ணப்பப் படிவம்

- விவரக் கையேடு இணைந்த விண்ணப்பப் படிவத்தின் கட்டணம்: ரூ.600. இப்படிவத்தை நிறைவு செய்யும் முன் விவரக் கையேட்டைக் கவனத்துடன் படித்து விண்ணப்பிக்க வேண்டும்.

- தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககம், மாவட்ட/வட்டத் தலைநகர்களில் செயல்பட்டுவரும் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வித் தகவல் மையங்கள் ஆகிய இடங்களிலும் **ரூ.600/-ஐ** நேரடியாகச் செலுத்தி மேற்படி விவரக் கையேட்டையும் விண்ணப்பத்தினையும் பெற்றுக் கொள்ளலாம்.

- **பல்கலைக்கழக இணையதளத்தில் தொலைநிலைக்கல்வி இயக்ககத்தின் இளங்கல்வியியல் (பி.எட்) (2016–18) விண்ணப்பம் இடம்பெற்றுள்ளது. இணையதளத்திலுள்ள பிஎட் படிப்பிற்குரிய விண்ணப்பத்தைப் பதிவிறக்கம்** (download) **ரூ.600/–க்கான வரைவோலை இணைத்து அனுப்பலாம். வரைவோலை எடுக்க வேண்டிய பெயர் விவரம் "The Director, DDE, Tamil University, Thanjavur-613 010"**.

- அஞ்சல்வழிப் பெற விரும்புவோர் **"The Director, DDE, Tamil University, Thanjavur-613 010"** என்னும் பெயரில் ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் (விளம்பரம் வெளிவந்த நாளுக்குப்பின்) எடுக்கப்பட்ட ரூ.650/-க்குரிய தஞ்சாவூரில் மாற்றத்தக்க வரைவோலையை (Demand Draft) அனுப்பியும் பெற்றுக் கொள்ளலாம்.

## விண்ணப்பதாரர் கவனத்திற்கு

1. விண்ணப்பதாரர் தனது பகுதி-III (Part-III) மதிப்பெண்கள் எவையெனத் தெரிந்து செயல்பட வேண்டும். தன்னாட்சிக் கல்லூரிக்கும், ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் பகுதி III மதிப்பெண்கள் மாறுபடும். அவற்றை விண்ணப்பதாரரே உறுதி செய்து கொள்ள வேண்டும். (காண்க: பக்.16, 7)

2. நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்குள் இயக்ககத்திற்கு வந்து சேராவிட்டாலும், பணிச்சான்றிதழ் வரையறுக்கப்பட்ட படிவத்தில் இல்லையென்றாலும், அறிவுறுத்திய வகையில் விண்ணப்பப் படிவம் முழுமையாக நிறைவு செய்யப்படாமல் குறையுடையதாக உள்ளது எனக் கண்டறியப்பட்டாலும் எவ்வித அறிவிப்புமின்றி விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

3. விண்ணப்பங்கள் உரிய நாள் மற்றும் நேரத்திற்குள் இயக்ககத்திற்கு வந்து சேர்வதை விண்ணப்பதாரரே உறுதி செய்து கொள்ள வேண்டும். அஞ்சல் அல்லது தனியார் அஞ்சல் (கூரியர்) வழி ஏற்படும் தாமதங்களுக்கு இயக்ககம் பொறுப்பேற்காது.

4. தேர்ந்தெடுக்கப்பட்டோரின் பணி அனுபவச் சான்றிதழ் உட்பட, அனைத்துச் சான்றிதழ்களும் உரிய துறைகளுக்கு அனுப்பிச் சரிபார்க்கப்படும். இந்நடவடிக்கையில் விண்ணப்பதாரர் அளித்த விவரங்கள் தவறானவை என அறியப்படின் அவரது சேர்க்கை இரத்து செய்யப்படுவதோடு, அவர் மீது சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

5. **விண்ணப்பத்துடன் அனைத்துச் சான்றிதழ்களின் சான்றொப்பமிட்ட நகல்களை இணைத்தனுப்ப வேண்டும்.**

6. **கலந்தாய்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர் உரிய அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கற்பித்தல் பணி அனுபவச் சான்றிதழைக் கலந்தாய்வு அன்றே அளிக்கவில்லையெனில், சேர்க்கை கண்டிப்பாக இரத்து செய்யப்படும்.**

7. நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பத்தினை பல்கலைக்கழகம் வழங்கிய **A4 அளவு உறையில்** வைத்துப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**இயக்குநர் (பொ)**
**தொலைநிலைக் கல்வி இயக்ககம்**
**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர் - 613 010**

## நினைவில் கொள்ள வேண்டிய நாள்

- **சேர்க்கை விவரக் கையேடு மற்றும் விண்ணப்பம் பெறுவதற்கும், நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பத்தை தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் அளிப்பிப்பதற்கும் இறுதி நாள்:**

**30.11.2016** *மாலை 5-00* மணிவரை

## உத்தேச கால அட்டவணை

### முதலாமாண்டு

| செயல்பாடு | காலம் / மாதம் |
|---|---|
| விண்ணப்ப விளம்பரம் | அக்டோபர் - 2016 |
| விண்ணப்ப விற்பனை | நாளிதழில் விளம்பரம் வெளியான நாள் முதல் - 30.11.2016 மாலை 4.00 மணி வரை |
| விண்ணப்பம் வந்து சேர இறுதி நாள் | 30.11.2016 மாலை 5.00 மணி |
| சேர்க்கை நாள்கள் | சனவரி - 2017 |
| கலந்தாய்வு வகுப்புகள் | பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் 2017 |
| பயிற்சிப் பட்டறை வகுப்புகள் | மே 2017 (12 நாள்கள்) தொடர்ச்சியாக |
| கற்பித்தல் பயிற்சி | முதல் பயிற்சிப்பட்டறைக்குப் பின்னும் இரண்டாவது பயிற்சிப் பட்டறைக்கு முன்னும் |
| தேர்வு | டிசம்பர் -2017 |

### இரண்டாமாண்டு

| செயல்பாடு | காலம் / மாதம் |
|---|---|
| கலந்தாய்வு வகுப்புகள் | பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் 2018<br>(சனி,ஞாயிறு மற்றும்<br>அரசு விடுமுறை நாள்களில்- 6 நாள்கள்) |
| பயிற்சிப் பட்டறை வகுப்புகள் | மே 2018(12 நாள்கள்) |
| தேர்வு | டிசம்பர் -2018 |

குறிப்பு: இந்த உத்தேசக் கால அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சேர்க்கை மற்றும் பிற கற்பித்தல்-கலந்தாய்வு வகுப்புகள் நடைபெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும். எனினும் அவ்வப்போது ஏற்படும் நிர்வாகக் காரணங்களால் மேற்குறித்த கால அட்டவணையில் மாற்றம் செய்யப்படும்.

**இளங்கல்வியியல் (பி.எட்) பட்டப்படிப்பு**

- 'இளங்கல்வியியல்' பயிற்சி பெறாமல் பள்ளிகளில் பணியாற்றிவரும் ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்துவதே இந்தப் பட்டப்படிப்பை அளிப்பதன் முதன்மையான நோக்கமாகும்.
- கல்வித் தொழில்நுட்ப அடிப்படையில் கற்றல்-கற்பித்தல் நிகழ்வுகளை இனிமையாக்குவதும், புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு எளிதாகப் பாடங்களைப் புரிய வைப்பதற்கு உதவுவதும், வகுப்பறை மேலாண்மையை நெறிப்படுத்துவதற்கு வழிகாட்டுதலும், மாணவர் திறன்களை வெளிப்படுத்தும் வகையில் மதிப்பீட்டு முறைகளை உருவாக்குவதற்கு ஆற்றுப்படுத்துவதும், சமுதாயக் கடமைகளை மாணவர்களுக்கு ஊக்குவிப்பதை ஆசிரியர்களுக்கு உணர்த்துவதும் இப்பாடத் திட்டத்தின் தொடர் நோக்கங்களாக அமைகின்றன.
- இளநிலையில் பகுதி-III (முதன்மை மற்றும் துணைப்பாடம் ஆகியவற்றின் எழுத்து மற்றும் செய்முறைத் தேர்வுத் தாள்களின்) சராசரி விழுக்காட்டு மதிப்பெண், இன ஒதுக்கீடு, பிற வழிகாட்டு நெறிமுறைகளின்படி, 500 ஆசிரியர்கள் சேர்க்கைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- 'இளங்கல்வியியல்' படிப்பைப் பயிலும் ஆசிரிய மாணவர்களின் பணிக்கு இடையூறு இல்லாத வகையிலேயே பயிற்சி வகுப்புகள் அமைய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின் கல்வியியல் துறையில் அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். இவ்வாசிரியர்கள் சிறந்த கல்வி ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் அளிப்பர்.

## 1. சேர்க்கைக்கான தகுதிகள்

**1. பணி அனுபவம்**

- தமிழக அரசு அல்லது மைய அரசு அங்கீகரித்த ஏதேனும் ஒரு மழலையர்/ தொடக்க/ நடுநிலை/உயர்நிலை/மேல்நிலை/மெட்ரிக் பள்ளியில் குறைந்தது **இரண்டு ஆண்டுகள் முழுநேர ஆசிரியர் பணி அனுபவம் பெற்றுத் தமிழகத்தில் பணியாற்றிக் கொண்டிருப்போர் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.**
- விண்ணப்பதாரர் ஒன்றிற்கும் மேற்பட்ட பள்ளிகளில் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்த அனுபவம் ஏற்றுக் கொள்ளப்படும். அவர்களது இரண்டாண்டுப் பணி அனுபவத்தில் இடைவெளி இருக்கலாம்.
- விண்ணப்பதாரர் 10+2+3 அல்லது 11+1+3 முறையில் பயின்று இருக்க வேண்டும். பத்தாம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்குப் பின் இரண்டு ஆண்டுகள் முழுநேர ஆசிரியர் பயிற்சி **(D.T.Ed)**தகுதியுடன்,மூன்றாண்டுகள் இளநிலைப் பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- தொடக்கக்கல்வியை கற்பித்தலுக்கான ஆசிரியர் பயிற்சியை(D.T.Ed) முடித்திருக்க வேண்டும் (Trained in service teachers in elementary education) என்பது அடிப்படைத் தகுதியில் முதன்மையானதாகும். **(D.T.Ed)** பெறாமல் இளநிலை பட்டத்தைக்கொண்டு விண்ணப்பிக்க இயலாது.

### 1.2. கல்வித் தகுதி

- விண்ணப்பதாரர்களுக்கு உரிய கல்வித் தகுதிகளும் பாடக்குறியீடும் பக்க எண்10-11இல் உள்ள அட்டவணையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

- ஐந்து ஆண்டுகள் தொடர்நிலையில் நேரடியாக முதுநிலைப் பட்டம் (Integrated PG degree) பெற்று பணியாற்றும் ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். (காண்க: பக்.12, 4. தரவரிசைக்கான முறைமைகள்).

- மூன்று ஆண்டு இளநிலைப் பட்டப்படிப்பில் இரண்டு அல்லது மூன்று முதன்மைப் (double or triple major) பாடங்களைப் பயின்றிருந்தால் அவற்றுள் ஏதேனும் ஒரு முதன்மைப் பாடத்தின் அடிப்படையில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் (காண்க: பக்.12, 4. தரவரிசைக்கான முறைமைகள்).

### 1.3 விண்ணப்பிக்கத் தகுதியற்றோர்

- மேல்நிலைப்பள்ளிக் கல்வித்தகுதி (+2) இல்லாமல் திறந்தநிலை முறையில் (Open University System) நேரடியாக இளநிலைப் பட்டம் பெற்றவர்களும் இளநிலைப் பட்டம் பெறாமல் நேரடியாக முதுநிலைப் பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.

- பக்கம் 10-11இல் குறிப்பிட்டுள்ள பாடப் பிரிவைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களைத் தவிர ஏனைய பாடங்களைப் பயின்றவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.

- பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு, இளநிலை (UG) வகுப்பு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் தமிழை ஒரு பாடமாகப் பயிலாதவர் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர் ஆவார்.

### 1.4. படிப்பின் கால அளவு

- தொலைநிலை இளங்கல்வியியல் பட்டப் படிப்பின் காலம் **இரண்டு ஆண்டுகள்** (2016ஜூலை முதல் 2018 ஜூன் வரை). இப் படிப்பில் சேரும் மாணவர்கள் **நான்கு ஆண்டுகளுக்குள்** தங்கள் படிப்பினை முடிக்க வேண்டும்.

### 1.5. பயிற்று மொழி

- ஆங்கிலப் பாடம் தவிர அனைத்துப் பாடங்களும் தமிழ் வழியில் மட்டுமே கற்பிக்கப்படும்.

## 2. சேர்க்கை விதிமுறைகள்

### 2.1 இட ஒதுக்கீடு

- தமிழக அரசின் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் சேர்க்கை நடைபெறும்.
- எந்த பாடத்திலேனும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வகுப்பினரில் சேர்க்கைக்குப் போதுமான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கவில்லை எனில், அவ்விடங்கள் இதர பாடப்பிரிவில் வாய்ப்பைப் பெறாமல் உள்ள அதே வகுப்பினருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

| வகை | | இட ஒதுக்கீட்டு விழுக்காடு |
|---|---|---|
| • பொதுப்போட்டியினர் | (OC) | 31.0 %<br>(தமிழகத்தைச் சார்ந்த முன்னாள் படை வீரரின் மகன் அல்லது மகளுக்கு 1% ம், மாற்றுத்திறனாளிக்கு (differently abled) 3% ம்* இதில் அடங்கும்).<br>இவர்கள் தர வரிசைப் பட்டியலின்படி பொதுப் போட்டியில் வைக்கப்படுவர். |
| • பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | (BC) | 26.5 % |
| • பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) | (BCM) | 03.5 % |
| • மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் | (MBC/DNC) | 20.0 % |
| • ஆதி திராவிடர் | (SC) | 15.0 % |
| • ஆதி திராவிடர் (அருந்ததியர்) | (SCA) | 03.0 % |
| • பழங்குடியினர் | (ST) | 01.0 % |

* **மாற்றுத்திறனாளியின் மாற்றுத் திறன் விழுக்காட்டு (Disability percentage) அடிப்படையில் சேர்க்கை அமையும். எனவே, இவ்விண்ணப்பதாரர்கள் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு, நல அலுவலரிடமிருந்து (Department of Rehabilitation of the Disabled) பெறப்பட்ட பதிவுப் புத்தகத்தைக் கலந்தாய்வு அன்றே தவறாமல் கொண்டு வர வேண்டும்.**

* **சிறப்புப்பிரிவினர்**

மாற்றுத்திறனாளிக்குக் கீழ்க்காணும் வகையில் ஒதுக்கீடு அளிக்கப்படும்.

1. பார்வையற்றோர் - 1%
2. பிற மாற்றுத்திறனாளிகள் - 2%

அ) மேற்குறிப்பிட்ட சிறப்புப்பிரிவினரில் போதுமான அளவிற்கு விண்ணப்பங்கள் பெறப்படாவிடில், இயக்ககத்தில் பெறப்பட்ட மாற்றுத் திறனாளி விண்ணப்பங்களுக்கு மேற்குறிப்பிட்ட விழுக்காட்டு அளவு மாற்றி அளிக்கப்படும்.

ஆ) ஒரே விழுக்காட்டு அளவைக் கொண்ட மாற்றுத்திறன் பெற்ற விண்ணப்பதாரர்களுள் சமநிலை ஏற்படும்போது (a tie), பிற இனப் பிரிவினரில் மேற்கொள்ளப்படும் நடைமுறையே பின்பற்றப்படும். (காண்க: பக்.12 மற்றும் 13, 4. தரவரிசைக்கான முறைமைகள்)

| வ.எண். | இனம் | இனச் சான்றிதழ் வழங்கத் தகுதியுடைய அலுவலர் |
|---|---|---|
| 1. | பழங்குடியினர் | வருவாய்க் கோட்ட அலுவலர்/மாவட்ட உதவி ஆட்சியர்/மாவட்ட சார் ஆட்சியர் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| 2. | ஆதி திராவிடர் வகுப்பினர் /ஆதி திராவிடர் (அருந்ததியர்) | வட்டாட்சியர் |
| 3. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், இஸ்லாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) | வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத வருவாய்த்துறை அலுவலர் அல்லது தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் அல்லது சாதிச் சான்றிதழ் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்புத் துணை வட்டாட்சியர்/ கூடுதல் தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், மண்டலத் துணை வட்டாட்சியர் |
| 4. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர் மரபினர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொட்டிய நாயக்கர் (ராஜ கம்பளம், கொல்லவர், சில்லவர், தொக்களவர், தொழுவ நாயக்கர் மற்றும் எர்ரகொல்லார் உட்பட) | தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் |

## 3. பாடப்பிரிவுக் குறியீடும், மாணவர் இடஒதுக்கீடும்*

* ஒரு குறிப்பிட்ட பாடப்பிரிவில் போதிய அளவு விண்ணப்பங்கள் பெறப்படாவிடில், அப்பாடப்பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் பிற பாடப்பிரிவிற்கு மாற்றி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும் பெறப்படும் விண்ணப்பங்களுக்கேற்ப ஒதுக்கீட்டு விழுக்காடு மாற்றியமைக்கப்படும்.

| பாடப் பிரிவுகள் | | ஒதுக்கீட்டு விழுக்காடு |
|---|---|---|
| **தமிழ் பாடக்குறியீட்டு எண் - 01** | | |
| தமிழ்/ தமிழ் இலக்கியம் | *(B.A.Tamil/B.Litt)* | 40 % |
| **ஆங்கிலம் பாடக்குறியீட்டு எண் - 02** | *(English)* | 10 % |
| **கணிதம் பாடக்குறியீட்டு எண் - 03** | | 10 % |
| கணிதம் | *(Mathematics)* | |
| பயன்பாட்டுக் கணிதம் | *(Applied mathematics)* | |
| **அறிவியல் பாடக்குறியீட்டு எண் - 04** | | 10 % |
| கணினி அறிவியல் | *(B.Sc.Computer science)* | |
| கணினி பயன்பாட்டியல் | *(BCA)* | |
| தகவல்தொழில்நுட்பவியல் | *(B.Sc.IT)* | |
| இயற்பியல் | *(Physics)* | |
| பயன்பாட்டு இயற்பியல் | *(Applied physics)* | |
| மின்னணுவியல் | *(Electronics)* | |
| புவி இயற்பியல் | *(Geophysics)* | |
| உயிரி இயற்பியல் | *(Biophysics)* | |
| வேதியியல் | *(Chemistry)* | |
| உயிரி வேதியியல் | *(Biochemistry)* | |
| பயன்பாட்டு வேதியியல் | *(Applied chemistry)* | |
| தாவரவியல் | *(Botany)* | |
| தாவர உயிரியல் | *(Plant biology)* | |
| சுற்றுச்சூழல் அறிவியல் | *(Environmental science)* | |
| உயிரிநுட்பவியல் | *(Biotechnology)* | |
| தாவர உயிரித் தொழில்நுட்பவியல் | *(Plant Biotechnology)* | |
| விலங்கியல் | *(Zoology)* | |
| நுண்ணுயிரியல் | *(Microbiology)* | |

| பாடப் பிரிவுகள் | | ஒதுக்கீட்டு விழுக்காடு |
|---|---|---|
| **சமூக அறிவியல் பாடக்குறியீட்டு எண் - 05** | | 30 % |
| வரலாறு | *(History)* | |
| புவியியல் | *(Geography)* | |
| பயன்பாட்டுப் புவியியல் | *(Applied geography)* | |
| முதுநிலை மனை அறிவியல் * | *(M.Sc. Home science)* | |
| முதுநிலைப் பொருளியல் * | *(M.A Economics)* | |
| முதுநிலை வணிகவியல் * | *(M.Com Commerce)* | |
| முதுநிலை அரசியல் அறிவியல் * | *(M.A Political science)* | |
| முதுநிலைச் சமூகவியல் * | *(M.A Sociology)* | |
| முதுநிலை உளவியல் * | *(M.A./M.Sc. Psychology)* | |
| முதுநிலைத் தத்துவவியல் * | *(M.A Philosophy)* | |
| முதுநிலைத் தர்க்கவியல் * | *(M.A. Logic)* | |
| முதுநிலை இந்தியப் பண்பாடு * | *(M.A. Indian culture)* | |

1. * இக்குறியீட்டு விண்ணப்பதாரர்கள் முதுநிலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். இம்மாணவர்கள் இளநிலையில், தொடர்புடைய பாடப்பிரிவில் பயின்றிருக்க வேண்டும். மாற்றுப் பாடத்தில் இளநிலைப் பட்டம் பெற்றவராயின் (cross major) அவர் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர் ஆவார்.

2. ஒவ்வொரு பாடப்பிரிவிலும் போதுமான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காத நிலை, விண்ணப்பதாரர்கள் இருந்தும் கலந்தாய்வின்போது நிராகரிக்கப்படுதலினால் ஏற்படும் காலி இடங்கள், விண்ணப்பதாரர்கள் கலந்தாய்விற்கு வராமையால் ஏற்படும் காலி இடங்கள் ஆகியவை அவ்வவ் இடஒதுக்கீட்டிற்கேற்ப தமிழ்ப் பாடப் பிரிவிற்கு மாற்றி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 4. தரவரிசைக்கான முறைமைகள்

- இளநிலைப் பட்ட வகுப்பில் பகுதி III இல் பெற்ற ஒட்டுமொத்த மதிப்பெண்களின் சராசரி விழுக்காட்டை முதன்மையாகக் கொண்டு தரவரிசைக்கான முறைமைகளில் கூறப்பட்டுள்ள மதிப்பெண் அடிப்படையிலும் தமிழக அரசின் இட ஒதுக்கீட்டு அடிப்படையிலும் சேர்க்கை நடைபெறும்.

- விண்ணப்பதாரர் இளநிலைப் பட்டம் பகுதி-IIIஇல் (முதன்மைப் பாடம் (Major) மற்றும் துணைப் பாடம் (Allied) ஆகியவற்றின் எழுத்துத் தேர்வு (Theory) மற்றும் செய்முறைத் தேர்வு (Practical)பெற்ற ஒட்டுமொத்த தாள்களின் சராசரி விழுக்காடு (Percentage)(நான்கு தசம இடத்திருத்தமாக)) எடுத்துக் கொள்ளப்படும்.

- இளநிலைப் பாட பகுதி-III எழுத்து மற்றும் செய்முறைத் தேர்வு உள்ளிட்ட முதன்மைப் பாடத் தாள்களின் சராசரியைத் தனியாகவும், துணைப்பாடத் தாள்களின் சராசரியைத் தனியாகவும் கணக்கெடுத்து, அதற்குப் பின்னர் இவ்விரு சராசரிகளுக்கும் சராசரியைக் கண்டுபிடித்து குறிப்பிடவும்.

- தமிழ் இலக்கியம் (பி.லிட்.) பட்ட மதிப்பெண் சான்றிதழில் தனியாக பகுதி-III தாள்கள் இவை எனப் பிரித்து மதிப்பெண்கள் குறிப்பிடப்பட்டு இருந்தால் அவர்கள் மட்டும் அந்த சராசரி விழுக்காட்டு மதிப்பெண்ணைக் குறிப்பிட வேண்டும். ஏனைய தமிழ் இலக்கியம் பட்டம் பெற்றோர் மூன்றாண்டுகளுக்குரிய தாள்களின் சராசரி விழுக்காட்டைக் குறிப்பிட வேண்டும்.

- இரண்டு அல்லது மூன்று முதன்மைப் பாடங்களை (Double or Triple Major) இளநிலைப் பட்டப்படிப்பில் பயின்றிருப்பின் (மூன்று ஆண்டு படிப்பு) விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் முதன்மைப் பாடத்தின் சராசரி மதிப்பெண் மட்டுமே தரவரிசைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

- ஐந்து ஆண்டுகள் தொடர்நிலையில் கற்கும் (Integrated PG course) முதுநிலைப் பட்டப் படிப்பாக இருந்தால், முதல் மூன்று ஆண்டுகளுக்கு உரிய பகுதி III இன் (முதன்மைப்பாடம் மற்றும் துணைப்பாடம் ஆகியவற்றின் எழுத்துத் தேர்வு மற்றும் செய்முறைத் தேர்வு) மதிப்பெண்களின் சராசரி விழுக்காடு மட்டும் தரவரிசைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அவ்வாறு தரவரிசைப்படுத்தப்படும்போது முதுநிலைப் பாடத்திற்குக் கூடுதலாக நான்கு மதிப்பெண்கள் வழங்கப்படும்.

- இளநிலைக் கணினி அறிவியல் (B.Sc.Comp.Science), இளநிலைத் தகவல் தொழில்நுட்பவியல் (B.Sc.I.T), இளநிலைக் கணினிப் பயன்பாட்டியல் (BCA) போன்ற பாடப்பிரிவுகளை முடித்து முதுநிலையில் MCA அல்லது தொடர்புடைய முதுநிலைப் பட்டம் பெற்றிருந்தால் அவர்களுக்குக் கூடுதலாக 4 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

- வணிகவியல், பொருளியல், மனைஅறிவியல், அரசியல் அறிவியல், சமூகவியல், உளவியல், தத்துவவியல், தர்க்கவியல், இந்தியப் பண்பாடு ஆகிய பாடங்களுக்கு இளநிலைப் பாடம் பகுதி -IIIஇல் பெற்ற சராசரி விழுக்காடு எடுத்துக் கொள்ளப்படும். முதுநிலைப் பட்டம் பெற்றதற்குத் தனியாக **4 மதிப்பெண்கள்** அளிக்கப்படும். இவ்விண்ணப்பதாரர்கள் முதுநிலைப் பட்டம் பெற்றிருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க இயலும்.***(காண்க: பக்.11)***

## தரவரிசை மதிப்பெண் கணக்கிடும் முறை

| வ.எண். | வகை | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. | இளநிலை (UG)ப் பாடம் பகுதி III (முதன்மை (Major) மற்றும் துணைப்பாடம் (Allied) ஆகியவற்றின் எழுத்து (Theory)மற்றும் செய்முறைத் (Practical)தேர்வுக்கான ஒட்டுமொத்தத் தாள்களின் சராசரி விழுக்காடு) | தரவரிசைக்கு அடிப்படை மதிப்பெண் |
| 2. | முதுநிலை (PG) பட்டம் பெற்றிருந்தால் * | 4 |
| 3. | ஆய்வியல் நிறைஞர் (M.Phil.,) பட்டம் பெற்றிருந்தால் * | 4+1 |
| 4. | முனைவர் (Ph.D.,) பட்டம் பெற்றிருந்தால் * | 4+1+1 |
| 5. | பணி அனுபவம் (இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படின்) மூன்றாம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டிற்கும் ஒரு மதிப்பெண் வீதம் உயர்ந்த அளவாக 15 மதிப்பெண்கள் வரை | 1-15 |

* - **முதுநிலைப் பட்டம், ஆய்வியல் நிறைஞர் பட்டம், முனைவர் பட்டம் ஆகிய உயர்கல்வித் தகுதிக்குரிய கூடுதல் மதிப்பெண்கள், இளநிலைப் பட்டப்படிப்பில் முதன்மைப் பாடமாகக் கொண்டு பயின்ற, அதே பாடத்தில் உயர்கல்வித் தகுதி பெற்றிருந்தால் மட்டுமே வழங்கப்படும்.**

**4.1 தரவரிசையில் ஒரே தரத்தை ஒன்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பெற்றிருப்பின் சமநிலை ஏற்படும்போது** (a tie), **கீழ்க்காணும் வரிசையில் முதன்மைப்படுத்தப்பட்டுத் தரவரிசை செய்யப்படும்.**

(1) உயர்கல்வித் தகுதி பெற்றமை (PG / M.Phil., / Ph.D.,)

(2) பணி அனுபவக் கூடுதல் ஆண்டுகள் (முதல் இரண்டு ஆண்டுகள் தவிர்த்து)

(3) இளநிலைப் பாடப் பகுதி (III) முதன்மை மற்றும் துணைப்பாட எழுத்து மற்றும் செய்முறைத் தேர்வு ஒட்டுமொத்த தாள்களின் சராசரி விழுக்காடு.

(4) பிறந்த நாள்

| | |
|---|---|
| **கரூர்**<br>அரசு மகளிர் கல்வியியல் கல்லூரி<br>பண்டுதகாரன் புதூர்,<br>மண்மங்கலம் -அஞ்சல்,<br>கரூர்-639 006. | 04324-271114 |
| **கோயம்புத்தூர்**<br>ஆர்.வி.எஸ்.கல்வியியல் கல்லூரி,<br>கண்ணம்பாளையம், சூலூர்,<br>கோயம்புத்தூர் - 641 402 | தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையைப் பொறுத்து பரிசீலிக்கப்படும். |
| **தஞ்சாவூர்**<br>கல்வியியல் கல்லூரி,<br>தமிழ்ப் பல்கலைக்கழகம்<br>தஞ்சாவூர் -613 010 | 04362-227782 |
| **அரக்கோணம்**<br>விவேகானந்தா வித்யாலயாகல்வியியல் கல்லூரி,காவனூர் கிராமம்,<br>அரக்கோணம் தாலுக்கா<br>வேலூர் மாவட்டம் 631 004 | 04177- 293840 |
| **மதுரை**<br>ஆறுமுகம் நல்லமணி மகளிர் கல்வியியல் கல்லூரி<br>டுவாட் ( TWAD) காலனி, பொறியாளர் நகர்,<br>திருமால்புரம் (அஞ்சல்)<br>திருப்பாலை, மதுரை-14 | 0452-2681016 |

## 6. மைய இட ஒதுக்கீடு

- தொடர்பு வகுப்பு மைய ஒதுக்கீட்டில் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் தாமே தேர்வு செய்யலாம். கலந்தாய்விற்குப் பின்னர் ஒவ்வொரு மையத்திற்கும் 100 மாணவர்கள் என ஒதுக்கீடு செய்யப்படுவர்.

- ஒரே மையத்தை நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கோரினால், விண்ணப்பதாரர் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியின் அடிப்படையில் முதல் நூறு மாணவர்களுக்கு அந்த மையம் ஒதுக்கப்படும்; ஆயினும் இயக்ககத்தின் முடிவே இறுதியானது.

- நிர்வாகக் காரணங்களுக்காக, விளக்கக் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள எந்தத் தொடர்பு வகுப்பு மையத்தையும் மாற்றுவதற்கோ, நீக்குவதற்கோ, புதிய மையங்களைத் தோற்றுவிப்பதற்கோ பல்கலைக்கழகத்திற்கு முழு உரிமை உண்டு.

## 7. கட்டண விவரம்

- தற்காலிகமாகச் சேர்க்கைக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் சேர்க்கை உறுதி செய்யப்பட்டவுடன் பின்வரும் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.
- கற்பித்தல் மற்றும் பாடங்களுக்கான மொத்தக் கட்டணம் முதலாம் ஆண்டிற்கு **ரூ.25,300/-;** இரண்டாம் ஆண்டிற்கு **ரூ.25,000/-**.

- **ஒரு முறை செலுத்திய கட்டணம் திருப்பி அளிக்கப்படமாட்டாது.**

**கல்விக் கட்டணப் பங்கீட்டு விவரம்**

| கட்டண விவரம் | முதலாமாண்டு (ரூபாய்) | இரண்டாமாண்டு (ரூபாய்) |
|---|---|---|
| நுழைவுக் கட்டணம் | 250 | -- |
| சிறப்புக் கட்டணம் | 500 | 500 |
| கல்விக் கட்டணம் | 18,000 | 18,000 |
| பிற பல்கலைக்கழகப் படிப்பு அங்கீகரிப்புக் கட்டணம் | 250* | -- |
| பிற கட்டணங்கள் | 5,800 | 6,500 |
| முன்னாள் மாணவர் நலசங்க நிதி | 500 | -- |
| **கூடுதல் ...** | **25,300** | **25,000** |

* 1. பிற மாநிலங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றோர் ரூ.250க்குப் பதிலாக ரூ.400-ஐ செலுத்த வேண்டும். எனவே இவர்களின் படிப்புக் கட்டணம் ரூ.25,450/-

2. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றோர் ரூ.250க்குப் பதிலாக ரூ.900-ஐ செலுத்த வேண்டும். எனவே இவர்களின் படிப்புக் கட்டணம் ரூ.25,950/-

### 1. விண்ணப்பதாரரின் பெயர்

- விண்ணப்பதாரர் தனது பெயரை எஸ்.எஸ்.எல்.சி., மெட்ரிக் சான்றிதழின் முதல் பக்கத்தில் உள்ளவாறு. பெரிய எழுத்தில் (capital letters) அதற்கென கொடுக்கப்பட்ட கட்டங்களில் எழுதவும்.

- **முனைவர்** / **திரு** / **திருமதி** / **செல்வி** போன்ற வார்த்தைகளை எழுதக்கூடாது.

### 2. சிறப்புப் பிரிவினர்

- பார்வையற்றோர். மாற்றுத் திறனாளிகள் அல்லது முன்னாள் படைவீரரின் பிள்ளைகள் அதற்குரிய கட்டத்தில் குறிப்பிடவும்.

**3. கல்வித்தகுதி**

விண்ணப்பதாரர் முதுநிலைப்பட்டம் பெற்றவராக இருப்பினும் தங்களைத் தகுதிப்படுத்தும் கல்வித் தகுதியான இளநிலைப் பட்ட தகுதி நிலையை மட்டுமே குறிப்பிட வேண்டும். சான்றாக. விண்ணப்பதாரர் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றிருப்பினும் இளநிலைப் பட்டத் தகுதியையே அடிப்படையான தகுதியாக கருதி பி,ஏ /பி,லிட் என குறிப்பிட வேண்டும்.

**4. முகவரி**

உங்களது பெயர். தகவல் தொடர்பிற்கான முகவரி. அஞ்சல் குறியீட்டு எண் மற்றும் தற்போது பயன்பாட்டில் உள்ள தொலைபேசி மற்றும் கைபேசி எண்ணை மட்டும் பெரிய எழுத்தால் அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் தெளிவாக எழுதவும். விண்ணப்பதாரர் விண்ணபத்தில் அளித்துள்ள முகவரியிலேயே அனைத்துத் தொடர்புகளும் மேற்கொள்ளப்படும்.

**5. நிழற் படம்** (Photo)

விண்ணப்பப்படிவத்தில் 4X5 செ.மீ அளவுள்ள வண்ண நிழற்படத்தை ஒட்டவும். இந்த நிழற்படத்தில் சான்றொப்பம் பெற வேண்டியதில்லை. **மடக்கு ஊசிப்பொறி (stapler) அல்லது குண்டூசி கொண்டு நிழற்படத்தை இணைக்க வேண்டாம்.**

**6. கையொப்பம்**

விண்ணப்பதாரரின் கையொப்பத்தைக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் தெளிவாக இடவும்.

**7. இளநிலை மதிப்பெண் விழுக்காடு**

- இளநிலை மதிப்பெண் பட்டியலில் உள்ள பகுதி III இன் மதிப்பெண்களுக்கு சராசரி விழுக்காடு கணக்கிடப்பட வேண்டும். **இளநிலைப் பட்டப் படிப்பில் முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளின் முதன்மை மற்றும் துணைமைப் பாட எழுத்து மற்றும் செய்முறைத் தேர்வுகளில் பெற்ற ஒட்டு மொத்த மதிப்பெண்களின் சராசரி விழுக்காடே சேர்க்கைக்கான அடிப்படை மதிப்பெண்ணாக ஏற்றுக் கொள்ளப்படும்.** பகுதி I, IIஇன் மதிப்பெண்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது.

- **தமிழ் பி.லிட் படித்தவர்கள் தங்களது மூன்று ஆண்டுகளின் மொத்த மதிப்பெண்களின் விழுக்காட்டை குறிப்பிடவும்.**

- இளநிலைப் பாடப்பிரிவில் பகுதி III முதன்மை மற்றும் துணைப் பாடம் ஆகியவற்றில் பெற்ற ஒட்டுமொத்த மதிப்பெண்கள் கிரெடிட் புள்ளிகளில் (credit points) கொடுத்திருந்தால் அவர்கள் உரிய கல்லூரி அல்லது பல்கலைக்கழகங்களைத் தொடர்பு கொண்டு அதற்கு இணையான சராசரி விழுக்காட்டை இதில் ஏற்படும் பிழைகளுக்கு விண்ணப்பதாரரே முழுப் பொறுப்பாளர் ஆவார். கலந்தாய்வின்போது உரிய நிறுவனம் வழங்கியுள்ள கிரெடிட் புள்ளிகளுக்கு நிகரான சராசரி விழுக்காட்டுச் சான்றிதழை அளிக்க வேண்டும்.

- இளநிலைப் பட்டம் பகுதி IIIஇல் உள்ள அனைத்துத் தாள்களின் எழுத்து மற்றும் செய்முறைத் தேர்வுகளின் மதிப்பெண்களையும் ஒட்டுமொத்தமாகக் கூட்டிப் பின்னர் அம்மொத்த மதிப்பெண்களுக்கும் சராசரி விழுக்காட்டைக் கணக்கெடுத்து நான்கு தசமத்திருத்தமாக குறிப்பிடவேண்டும். அவ்வாறு குறிப்பிடும்போது நான்காம் தசமத்தில் திருத்தம் செய்யாமல், உள்ளது உள்ளவாறே அவ்வெண்ணைக் குறிப்பிட வேண்டும். சான்றாக, பின்வரும் விவரங்களை அறியவும்

| பகுதி III இன் சராசரி விழுக்காடு | படிவத்தில் குறிப்பிட வேண்டிய சரியான முறை | தவறாகக் குறிப்பிடும் முறை |
|---|---|---|
| 1. 65 % | 65.0000 | 65 |
| 2. 65.12 % | 65.1200 | 65.12 |
| 3. 65.123% | 65.1230 | 65.123 அல்லது 65.12 |
| 4. 65.12345 % | 65.1234 | 65.1235 |
| 5. 65.66666 % | 65.6666 | 65.6667 |



எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. (குறள். 424)

**8. உயர்கல்வித் தகுதி**

a) விண்ணப்பதாரர் முதுநிலைப் பட்டம் பெற்றிருப்பின் கொடுக்கப்பட்டுள்ள கட்டத்திற்குள் [ ] குறியிட்டு தேர்ச்சி பெற்ற ஆண்டையும் குறிப்பிடவும்.

**ஆய்வியல் நிறைஞர்**

b) விண்ணப்பதாரர் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றிருப்பின் கொடுக்கப்பட்டுள்ள கட்டத்திற்குள் [ ] குறியிட்டு தேர்ச்சி பெற்ற ஆண்டையும் குறிப்பிடவும்.

**முனைவர் பட்டம்**

c) விண்ணப்பதாரர் முனைவர் பட்டம் பெற்றிருப்பின் கொடுக்கப்பட்டுள்ள அடைப்புக் கட்டத்திற்குள் [ ] குறியிட்டு தேர்ச்சி பெற்ற ஆண்டையும் குறிப்பிடவும்.

**9. ஆசிரியர் பணி அனுபவம்**

விண்ணப்பதாரர் ஆசிரியர் பணி அனுபவ நிறைவு பெற்ற (பணி அனுபவத்தில் உள்ள மாதங்கள் நீங்கலாக) ஆண்டுகளின் எண்ணிக்கையை மட்டும் கொடுக்கப்பட்ட கட்டத்தினுள் எழுத வேண்டும் சான்றாக, 8 ஆண்டுகள் 10 மாதங்கள் பணி அனுபவம் உள்ள விண்ணப்பதாரர் ஆசிரியர் பணி அனுபவக் கட்டத்தில் [08] என்றே எழுதிக் கீழ் உள்ள கட்டங்களில் குறிப்பிட வேண்டும். **(முழுமை பெற்ற பணி அனுபவ ஆண்டுகளைத் தவிர எஞ்சியிருக்கும் மாதங்கள் கூடுதல் மதிப்பெண் வழங்குதற்குக் கணக்கில் கொள்ளப்படமாட்டாது.)**

**10. உறுதிமொழி**

உறுதிமொழியைப் படித்தபின் தங்களது முழுக் கையொப்பத்தையும் கொடுக்கப்பட்டுள்ள கட்டத்திற்குள் இடவும்.

## 8. கலந்தாய்விற்கு அழைத்தல்

- விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையிலான தரவரிசைப்படியும் தமிழக அரசின் இட ஒதுக்கீட்டு அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டோர் **தற்காலிகமாகக்** கலந்தாய்விற்கு அழைக்கப்படுவர். கலந்தாய்விற்குப் பின்னரே விண்ணப்பதாரரின் சேர்க்கை உறுதி செய்யப்படும்.

- கலந்தாய்விற்கு அழைப்புக் கடிதம் பெற்றதாலோ கலந்தாய்வில் கலந்து கொண்டதாலோ விண்ணப்பதாரர் சேர்க்கைக்குத் தகுதி பெற்று விட்டார் எனக் கருதக்கூடாது.

- கலந்தாய்விற்குக் **குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்குள்** வராதவர்களின் தெரிவு ஏற்கப்பட மாட்டாது. கலந்தாய்வின்போது சான்றிதழ் சரிபார்த்தலுக்கு அனைத்து மூலச் சான்றிதழ்களையும் வழங்க வேண்டும். கட்டணத் தொகையையும் முழுமையாகச் செலுத்த வேண்டும்.

- கலந்தாய்விற்கு வரும் விண்ணப்பதாரர், நிரந்தர இனச்சான்றிதழ் அட்டையுடன் (permanent community card) வர வேண்டும். **பழங்குடி இனத்தவராயின் (ST), பக்கம் 9இல் குறிப்பிட்டுள்ள அலுவலரிடமிருந்து பெறப்பட்ட இனச் சான்றிதழைக் கண்டிப்பாகக் கொண்டு வரவேண்டும்.**

- கலந்தாய்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரருக்கு நாட்படி மற்றும் பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது. அவர்கள் தங்கள் சொந்த செலவிலேயே வந்து செல்ல வேண்டும்.

**9. விண்ணப்பப் படிவங்கள் பின்வரும் காரணங்களுக்காகக் கலந்தாய்வின்போது நிராகரிக்கப்படும்:**

கலந்தாய்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள், கலந்தாய்வுக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நாள் மற்றும் நேரத்தில் நேரில் கலந்து கொள்ளாவிட்டாலோ, உரிய அனைத்து மூலச் சான்றிதழ்களையும் கலந்தாய்விற்கு எடுத்துவராவிட்டாலோ, அவரின் சேர்க்கை மறுக்கப்படும். அவருக்குக் கால நீட்டிப்பும், மீள ஒரு வாய்ப்பும் அளிக்க இயலாது.
இளநிலையில் தகுதியான ஒரு பாடத்தைப் பயின்று முதுநிலையை மாற்றுப் பாடத்தில் (Cross Major) பயின்றிருந்து, விண்ணப்பப்படிவத்தில் முதுநிலைக்கென ஒதுக்கப்பட்ட கட்டத்தில் குறிப்பிட்டதனால் (முதுநிலைக்கான 4 மதிப்பெண்களைக் கூடுதலாகப் பெற்றுத்) தர வரிசைப் பட்டியலில் முதன்மை பெற்றுத் தற்காலிகக் கலந்தாய்வுக்கு அழைக்கப்பட்டு மேற்படி உண்மை தெரிய வந்தால் அவரின் விண்ணப்பம் மறுக்கப்படும்.

பல்கலைக்கழகச் சான்றில் முதன்மைப் பாடத்தை (Major subject) மட்டும் பகுதி-IIIஆக எடுத்துக் கொண்டு மதிப்பெண் பட்டியலில் விழுக்காடு அளித்திருந்தாலும், விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தில் பகுதி-III க்குரிய கட்டத்தில் **முதன்மைப் பாடம் மற்றும் துணைப்பாடம்** (Major and Allied) **ஆகியவற்றின் எழுத்துத்தேர்வு மற்றும் செய்முறைத் தேர்வு** ஆகிய தாள்களில் தாம் மூன்றாண்டுகளில் பெற்ற ஒட்டுமொத்த மதிப்பெண்களின் சராசரி விழுக்காட்டையே குறிப்பிட வேண்டும். அவ்வாறில்லையெனில் அவ்விண்ணப்பமும் கலந்தாய்வின்போது மறுக்கப்படும்.

விண்ணபத்தில் விண்ணப்பதாரர்களால் குறிப்பிடப்பட்டிருக்கும் இளநிலைப் பாடம்- பகுதி III இல் உள்ள முதன்மை மற்றும் துணைப்பாட எழுத்து மற்றும் செய்முறைத் தேர்வு ஆகியவற்றின் ஒட்டுமொத்த மதிப்பெண்களின் சராசரி மதிப்பெண்ணுக்கும் கலந்தாய்வின்போது அவரே கணக்கிட்டு அளிக்கும் ஒட்டு மொத்த சராசரி மதிப்பெண்ணுக்கும் உள்ள வேறுபாடு கூடுதலாக அல்லது குறைவாக 0.0001 விழுக்காட்டு அளவிலேயே இருந்தாலும்கூட அவ்விண்ணப்பம் (தற்காலிகக் கலந்தாய்விற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும்) மறுக்கப்படும்.

இட ஒதுக்கீட்டில் பி.சி.எம் (BCM), எஸ்.சி.ஏ (SCA) ஆகிய பிரிவினருக்குத் தமிழக அரசின் புதிய உத்தரவுப்படி முறையே 3.5%, 3.0% என்ற அளவில் அவ்வப்பிரிவில் உள்ஒதுக்கீடு வழங்கப்படுவதால், விண்ணப்பதாரர் கட்டாயமாகத் தன் பிரிவை உறுதி செய்து, அதனைக் குறிப்பிட வேண்டும்.

BCM-ற்குப் பதிலாக BC-ஐயும், SCA-விற்குப் பதிலாக SC-ஐயும் விண்ணப்பதாரர் குறிப்பிட்டிருந்தால், அவரது விண்ணப்பம் மறுக்கப்படுவதற்கு அவரே காரணமாவார்.

மேலும், தாம் மறதியாகத் தெரியாமல் மாற்றி விண்ணப்பப்படிவத்தில் BC, SC இன ஒதுக்கீட்டுக் கட்டங்களில் குறிப்பிட்டு விட்டதாக விண்ணப்பதாரர்கள் தர வரிசை வெளியிடப்பட்ட பின்னரோ கலந்தாய்வின்போதோ தெரிவித்தால், அக்கோரிக்கைகள் தரவரிசையில் மிகப் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும்; ஆதலால் அவர்களது கோரிக்கைகள் எக்காரணத்தை முன்னிட்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அவர்களது விண்ணப்பங்கள் மறுக்கப்படும்.

சிறப்பு இட ஒதுக்கீட்டில் (Special reservation) விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர் முன்னாள் படைவீரரின் மனைவியாக இருந்தாலோ, தற்போது இந்தியப் படையில் பணிபுரிபவரின் மகன்/மகள் ஆகியோராக இருந்தாலோ அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும். ஆயினும் விண்ணப்பதாரர் முன்னாள் படைவீரரின் முறைப்படி தத்தெடுக்கப்பட்ட வாரிசுதாரர் (மகன்/மகள்) எனில் அவ்விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும்.

## 10. பணிச்சான்று மறுக்கப்படுவதற்கான காரணங்கள்

10.1 அரசு வழங்கிய பள்ளி அங்கீகாரம் எண் குறிப்பிடப்படாத பணிச்சான்றும், விவரக் கையேட்டுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் இல்லாமல் வேறுவடிவத்திலுள்ள பணிச்சான்றும் கலந்தாய்வு அன்று மறுக்கப்படும். சேர்க்கைக்கான தெரிவும் இரத்து செய்யப்படும்.

10.2 தலைமை ஆசிரியர் மற்றும் உரிய உயர் அலுவலர் அவர்களிடமிருந்து அலுவலக முத்திரையுடன் கூடிய கையொப்பமும், மேலொப்பமும் பெறாமல் கலந்தாய்வு அன்று பெறப்படும் பணி அனுபவச் சான்று, விண்ணப்பதாரர் தற்போது பணிபுரிந்து வருவதற்கான குறிப்பைத் தெளிவாக்காத பணி அனுபவச் சான்று ஆகியவை கலந்தாய்வின்போது மறுக்கப்படும். சேர்க்கைக்கான தெரிவும் இரத்து செய்யப்படும்.

## 11. பிற காரணங்கள்

**மேற்குறிப்பிட்ட காரணங்களைத் தவிர, சேர்க்கை தொடர்பாகக் கலந்தாய்வின்போதோ அதற்குப் பின்னரோ எழும் சிக்கல்களுக்குப் பல்கலைக்கழகம் எடுக்கும் முடிவே இறுதியானதாகும்.**

**மாதிரிப் படிவம்**

1. கீழ்க்கண்ட படிவம் மாணவர்களின் நலன் கருதி கொடுக்கப்பட்டுள்ளது.
2. இளநிலை பட்ட வகுப்பு, பகுதி-III இல் உள்ள முதன்மை மற்றும் துணைப்பாடங்களின் எழுத்து மற்றும் செய்முறைத் தேர்வுகளின் மதிப்பெண்களை, தேர்ச்சி பெற்ற பருவம் (semester) அல்லது ஆண்டு (annual) வாரியாக எழுதி, கீழ்க்கண்டவாறு* சராசரி விழுக்காட்டை கண்டுபிடித்து எழுதவும்.
3. **இப்படிவத்தினை நகலெடுத்து விண்ணப்பத்துடன் கண்டிப்பாக இணைக்க வேண்டும்**

| தாள்கள் | பாடக் குறியீட்டு எண் | பாடங்கள் (தாளின் பெயர்/ செய்முறைத் தேர்வின் பெயர்) | தேர்ச்சி பெற்ற ஆண்டு | மொத்த மதிப்பெண்கள் | பெற்ற மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |
| 7. | | | | | |
| 8. | | | | | |
| 9. | | | | | |
| 10. | | | | | |
| 11. | | | | | |
| 12. | | | | | |
| 13. | | | | | |
| 14. | | | | | |
| 15. | | | | | |
| 16. | | | | | |
| 17. | | | | | |
| 18. | | | | | |
| 19. | | | | | |
| 20. | | | | | |
| 21. | | | | | |
| 22. | | | | | |
| 23. | | | | | |
| 24. | | | | | |
| 25. | | | | | |
| 26. | | | | | |
| 27. | | | | | |
| 28. | | | | | |
| 29. | | | | | |
| 30. | | | | | |
| | | கூடுதல் ... | | | |

*** சராசரி விழுக்காடு கணக்கிடும் முறை**

இளநிலை பகுதி (III) சராசரி விழுக்காடு = [ இளநிலை (பகுதி -III ) முதன்மை மற்றும் துணைப் பாடங்களிலும் (செய்முறைத் தேர்வு உள்ளிட்ட) விண்ணப்பதாரர் பெற்ற மதிப்பெண்கள் கூடுதல் ________________________________ / இளநிலை (பகுதி- III) முதன்மை மற்றும் துணைப் பாடங்களிலும் (செய்முறைத் தேர்வு உள்ளிட்ட) ஒட்டுமொத்த மதிப்பெண்களின் கூடுதல் ____________________________________ ] x 100

= | | | ● | | | | (நான்கு தசமத் திருத்தமாக மதிப்பெண் சராசரி)

# தமிழ்ப் பல்கலைக்கழகம்

உலக மரபுச் சின்னமாகப் போற்றப்படும் பெரியகோயிலை உள்ளடக்கிய கோயில்களின் நகரமாகவும் தென்னிந்திய நுண்கலைகளின் பிறப்பிடமாகவும் இந்தியப் பண்பாட்டின் இருப்பிடமாகவும் தஞ்சாவூர் விளங்குகின்றது. இத்தகு தஞ்சைத் தரணி தமிழ்நாட்டின் உணவுக் களஞ்சியமாகவும் அறிவாற்றல் நிரம்பியதாகவும் ஆன்மீகத் துறையில் ஆயிரக்கணக்கான அறவோர்களையும் ஆலயங்களையும் கொண்டதாகவும் விளங்கும் புண்ணிய பூமியாகும். தென்னிந்தியாவின் ஆன்மீகத் தலைநகரமாக விளங்கும் தகுதி பெற்ற இவ்வூர் தென்கிழக்கு ஆசிய நாடுகளையும் ஆளுமை செய்த சோழப் பேரரசின் தலைநகரமும் ஆகும். திருக்கோயில்கள் எனும் பண்பாட்டுச்சுவடுகள் நிரம்பிய தலம் என்ற பெருமையையும் கொண்டது.

இத்திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாகச் சமுதாய நலத்திற்குப் பங்காற்றியவை. நிகழ்த்துக்கலைகளை வளர்த்த கலை அரங்குகளாகவும் கல்விக்கூடங்களாகவும் மருத்துவச் சாலைகளாகவும் ஆவணக் களஞ்சியங்களாகவும் நீதிமன்றங்களாகவும் பொதுமக்கள் கூடும் பொதுமன்றங்களாகவும் அவசரகாலங்களில் மறுவாழ்வு மையங்களாகவும் உணவுச் சாலைகளாகவும் மக்களின் நல்வாழ்வு மையங்களாகவும் திகழ்ந்து மனித சமுதாயத்தைப் பண்பாட்டுச் சிகரங்களாகப் படைத்துக் காட்டிய ஆற்றல் மிக்க இடங்களாக இவை பயன்பட்டுள்ளன.

தஞ்சையில் தமிழர்தம் அறிவு வீச்சின் விளக்க மையமாகவும் தமிழ் மொழி, இனம், பண்பாட்டு நுட்பங்களை உலகறியச் செய்யும் உயர்கல்விக் கோயிலாகவும் அமைந்த தமிழ்ப் பல்கலைக்கழகம், தமிழகத்திற்குத் தன்னிகரற்ற சிறப்பைச் சேர்த்துள்ளது. 1981-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு வெள்ளிவிழா கண்ட இப்பல்கலைக்கழகம், கீழ்க்காணும் முறைசார் கல்வித்துறைகள் வாயிலாக இதுவரை பல ஆய்வுகளை மேற்கொண்டு பல்வேறு பொருண்மை களில் நூல்களை வெளியிட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்திலுள்ள புலங்களும் துறைகளும் வருமாறு:

| புலம் | துறைகள் |
|---|---|
| **கலைப்புலம்** | சிற்பத்துறை, இசைத்துறை, நாடகத்துறை |
| **சுவடிப்புலம்** | ஓலைச்சுவடித்துறை, அரிய கையெழுத்துச்சுவடித் துறை, கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை, கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை |
| **வளர்தமிழ்ப் புலம்** | அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, மொழிபெயர்ப்புத்துறை, அகராதியியல் துறை, சமூக அறிவியல் துறை, அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித்துறை, கல்வியியல் மற்றும் மேலாண்மைத் துறை |
| **மொழிப்புலம்** | இலக்கியத்துறை, மொழியியல் துறை, மெய்யியல் துறை, பழங்குடி மக்கள் ஆய்வு மையம், நாட்டுப்புறவியல் துறை, இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி |
| **அறிவியல் புலம்** | சித்தமருத்துவத்துறை, தொல்லறிவியல் துறை, தொழில் மற்றும் நிலஅறிவியல் துறை, கட்டடக்கலைத்துறை, கணிப்பொறி அறிவியல் துறை, சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை நூலகம் மற்றும் தகவலறிவியல் துறை |

உயராய்வு மட்டுமன்றி, முனைவர், ஆய்வியல் நிறைஞர், முதுநிலைப் பட்ட வகுப்புகள் வழிப் பல்லாயிரம் பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பயின்றவர்கட்கு வேலைவாய்ப்பு வழிகாட்டு மையம் மூலம் வளாக நேர்காணல்கள் நடத்திப் பணிவாய்ப்புகளை உருவாக்கித் தருகின்றது. உலகளாவிய நிலையில் உயர்தமிழ்க் கல்வி ஆய்வுகளில் ஒப்பற்ற பெரும்பணி ஆற்றி வருகின்ற தமிழ்ப் பல்கலைக்கழகம் வெள்ளி விழா ஆண்டினை ஒட்டி, தமது விரிவாக்கப் பணியாக 2006-07 முதல் தொலைநிலைக்கல்வி வாய்ப்புகளைத் தனித்தன்மையோடு வழங்கிப் பெருமை கொண்டது.